[30th January 1961

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வட ஆற்காடு ஜில்லாவில் அறுவடையான காலத்தில் விலை காலணு, அரைபணு குறைந்து, பிறகு ஒரு அணுவிற்கு மேல் ஏறியிருக்கிறது. அப்போது காலணு குறைந்ததை வைத்துக்கொண்டு குறைந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து மேலும் அதிகப்படியான நியாய விலைக் கடைகளைத் திறக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் மன்றக் கூட்டம் முடிந்த பிறகு போய் கலெக்டரைப் பார்த்து இதையெல்லாம் பற்றிப் பேசலாம்.

SRI K. VINAYAKAM : Sir, is it a fact that the Government have issued orders to the Collectors to close the Fair Price Shops by the end of this month? If so, will the Government consider the possibility of retaining the shops at least for one or two months more, especially in te dry area of Tiruttani taluk which is notorious for its backwardness in agriculture?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This question will be dealt with according to the needs of the situation and the needs of the places concerned.

SRI M. KALYANASUNDARAM : ஸார், அமைச்சர் அவர்கள் விலை குறைந்திருக்கிறது என்று கலெக்டர் கூறியிருப்பதாகச் சொன்னார்கள். விலை எந்த அளவுக்கு குறைந்திருக்கிறது ? டிசம்பர் மாதத்திலிருந்ததைவிட ஜனவரியில் குறைந்திருக்கிறதா ?- சென்ற ஜனவரியில் என்ன விலை விற்றது ? இப்போது என்ன விலை விற்கிறது? இந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. கலெக்டர் சொன்னதைச் சொன்னேன். அது தவறு என்று மறுப்பதானுல் மறுக்கலாம். தேவை இருக்கிறது என்பதனுல்தான் இன்னும் நியாய விலைக் கடைகளை மூடாமல் வைத்திருக்கிறோம்.

Tractors and bulldozers

*267 Q.—SRI M. P. SARATHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயத்துக்குத் தேவையான டிராக்டர்கள், புல்டோசர்கள் வாங்குவது அன்னிய செலாவணிக் கட்டுப்பாட்டினுல் நிறுத்தி வைகக்கப்பட்டுள்ளதா ?

(இ) மத்திய அரசினரிடம் இதற்கு சலுகை காட்டி, அன்னிய செலாவணி ஒதுக்க கேட்கப்பட்டதா?

(உ) அப்படியானல், மத்திய அரசினரின் பதில் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) to (உ) The Government approached the Gobernment of India for the release of foreign exchange for the purchase of tractors required for the

30th January 1961]

Tractor Hiring Scheme and Tractor Hire Purchase Scheme. The Government of India have released foreign exchange to the tune of Rs. 18 lakhs for the purchase of tractors from the U.S.R.R. and Rs. 7 lakhs for the purchase of tractors from the United States of America for the Tractor Hiring Scheme. As regards the Tractor Hire Purchase Scheme, the Government of India have stated that the present foreign exchange position does not permit any additional import of tractors from free resources, that some firms have already been licensed for the manufacture of tractors within our country and that the production of tractors would get into stride during the Third Plan. They have also stated that until the locally manufactured tractors are available, this Government may on account of difficult foreign exchange schemes, meet the requirements to the extent possible from the normal imports.

SRI M. P. SARATHI : ஸார், எப்போது கேட்டாலும் விவசாய டெப்போவில் டிராக்டர் இல்லை, புல்டோசர் இல்லை என்று சொல்வதை நிவர்த்திக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இருப்பதைக் கொடுக்கிறோம், இல்லாததை இல்லை என்று சொல்லுகிறோம். இதை நிவர்த்தி செய்வதற்குத்தான் 25 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ரஷ்யாவிலிருந்து வாங்க 18 லட்சமும், அமெரிக்காவிலிருந்து வாங்க 7 லட்சம் ரூபாயும் சாங்ஷன் ஆகியிருக்கிறது என்று சொன்னேன்.

SRI A. VEDARATHNAM : கனம் அமைச்சர் அவர்கள் நம்முடைய உள் நாட்டில் டிராக்டர்கள் செய்யப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். இங்கே எவ்வளவு உற்பத்தி ஆகிறது? நம்முடைய தேவையிலே எத்தனை சதவிகிதம் ஈடு செய்ய முடியும்? பற்றாக்குறைக்கு வெளி நாட்டிலிருந்து தருவிக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி என்னிடம் விவரம் இல்லை. இப்பொழுதுதான் லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. பற்றாக்குறை இருக்கிறது. ஆகையினாலேதான் ரூபாய் 25 லட்சம் சாங்ஷன் ஆகியிருக்கிறது. அயல் நாட்டிலிருந்து வரவழைக்கப்படுகிறது. அது இல்லாமல் இருக்கிற பாரின் எக்சேஞ்சில் இறக்குமதி செய்து வாங்கிக்கொள்ளலாம்.

SRI M. KALYANASUNDARAM : எவ்வளவு மதிப்புள்ள டிராக்டர்கள் இறக்குமதி செய்யப்படவேண்டும் என்று நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு யோசனை கூறினார்கள்? அதில் எவ்வளவு கிடைத்தது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரூபாய் 25 லட்ச மதிப்புள்ளது அரசாங்கத்தின் உபயோகத்திற்கு. அது வந்துவிட்டது. ஹயர்பர்சேஸ் ஸ்கீமுக்கு ரூ. 10 லட்சம் கேட்டோம். அது கிடைக்கவில்லை.

[30th January 1961

Sri A. GOVINDASAMY : டிராக்டர்கள் இங்கு கிடைக்காத காரணததினுல் அதை வழங்க காலதாமதம் ஆகிறதா ? அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தில், அல்லது டயத்தில்தான் வாங்க வேண்டும் என்ற காரணத்தினுல் விவசாயிகள் வாங்க தடங்கலாக இருப்பதால் காலதாமதம ஆகிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி இல்லே. விவசாயிகள் கேட்பது இங்கு கிடைப்பதாக இருந்தால் கொடுக் கிருேம். அன்னிய நாட்டிலிருந்து வரவழைக்க வேண்டியிருந்தால் அதற்கு வேண்டிய அன்னிய நாட்டு செலவாணி இருப்பதைப் பார்த்துத்தான் முடிவு செய்யவேண்டியிருக்கிறது.

Sri K. B. S. MANI : நம்முடைய நாட்டில் உற்பத்தி செய்வ தற்கு லேசென்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். அப்படி எவ்வளவு மூலதனம் போட்டு எவ்வளவு காலத்தில், எத்தனே டிராக்டர்கள் உற்பத்தி செவதற்கான பெர்மிட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி என் னிடம் தகவல் இல்லே. வேருெரு கேள்வி என்னுடைய சகா தொழில் அமைச்சர் அவர்களுக்கு போட்டால், அவர்கள் விவரம் கொடுக்கலாம்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, low H.P. tractors are manufactured in Japan. I want to know from the Hon. Minister whether, with a view to help small ryots, these tractors also will be imported from Japan and whether foreign exchange has been released for that purpose?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : For importing tractors from Japan, foreign exchange is the bottleneck.

Sri M. KALYANASUNDARAM : ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு வெளி நாட்டுச் செலாவணி வேண்டியிருக்கலாம். ஆனுல் ,சோவியத் யூனியனி லிருந்து இறக்குமதி செய்வதானுல் ரூபாயிலே விற்கலாம், ரூபாயிலே வாங்கலாமே? அதையாவது அதிகப்படுத்துவதற்கு யோசனே கூறினுர்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நம்முடைய விவ சாயிகள் ரஷ்ய டிராக்டர்களே உபயோகிப்பதற்கு இன்னும் தயஙகுகிருர்கள். (குறுக்கீடு) நான் கூட ரஷ்யா போய்விட்டு வந்தேன். அதனுல் கம்யூனிஸ்டு ஆகவில்லே. மெஷினேப் பார்த்து பயப்படுவதென்பது இல்லே. ரூ. 18 லட்சத்திற்கு ரஷ்யாவிலிருந்து வாங்குகிருேம். அது ரூபாய் பண்டாக இருப்ப தால் சௌகரியம் தான். அந்த அளவுக்கு வாங்குவதாக முடிவு செய்திருக்கிருேம்.

Sri C. NATARAJAN : டிராக்டர்கள், புல்டோசர்களே விவசாயி களுக்குக் கொடுப்பதற்காக 'ஹயர் பர்சேஸ் ஸ்கீம் வைத்திருக்கிருர்கள். அவர்கள் அதிகப் பணம் கட்டவேண்டும்

30th January 1961]

என்று ஏதோ விதி இருப்பதாகத் தெரிகிறது. அதைக் குறைத்து கட்டி வாங்குவதற்கு வழிவகைகள் செய்ய அரசாங்கத்திற்கு ஏதாவது ஆலோசனை உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிக விலைக்கு வாங்குவதற்கே டிராக்டர்கள் இல்லை. அன்னியச் செலாவணி இல்லை. இதுபற்றி நிபந்தனைகளை மாற்றும் விஷயத்தைப் பற்றி தனியாக கேள்வி போடவேண்டும்.

SRI M. KANDASAMI PADAYACHI : உபயோகத்தில் இருக்கக் கூடிய சில டிராக்டர்கள், புல்டோஸர்கள் கெட்டுப்போய்விட்டால், ஸ்பேர் பார்ட்ஸ் இல்லாததால் வருஷக் கணக்கில் ரிபேர் ஆகாமல் இருக்கிறது, சாமான் இல்லை, சென்னைக்கு எழுதியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படியில்லாமல் தேவையான ஸ்பேர் பார்ட்ஸ் வைத்திருந்தால் உடனே ரிபேர் செய்வதற்கு சௌகரியமாக இருக்கும். அதற்கு வேண்டிய முயற்சியை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்பேர் பார்ட்ஸுக்கும் அன்னியச் செலாவணி வேண்டியிருக்கிறது. இதற்கு சுமார் ரூ. 10, 12 லட்சம் வேண்டியிருக்கிறது. சமீபத்தில் மத்திய அரசாங்கம் ரூ. 3 லட்சம் வரையில் அனுமதித்திருக்கிறது. அது வரையில் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கி இதையெல்லாம் சரிப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

SRI A. GOVINDASAMY : போலண்டு டிராக்டர்கள் மலிவான விலையில் கிடைக்கிறதே ? அதை அரசாங்கம் வாங்குவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரஷ்யன் டிராக்டர் வருகிறது. அதைப் பார்த்துவிட்டு மற்றதைச் செய்யலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : ரூ. 25 லட்சத்திற்கு டிராக்டர்கள், புல்டோஸர்கள் வாங்கினும், அது தாலுகாவிற்கு ஒரு டிராக்டர், ஒரு புல்டோஸர் கூட காணவில்லை. தீவிர விவசாய அபிவிருத்தி செய்யவேண்டும் என்று மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தீட்டிக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் இதற்கு மேலும் அதிகப்படியாக பணம் ஒதுக்குவதற்கு வேண்டிய முயற்சிகளை கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ளுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எவ்வளவு தூரம் சாத்தியப்படுமோ அவ்வளவு தூரம் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி கனம் அங்கத்தினர் சொன்னார்கள். மூன்றாவது திட்டம் முடிவதற் குள்ளாக நமது நாட்டிலேயே உற்பத்தியாகும் டிராக்டர்கள் கிடைக்கும்.